LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearch2024,3: 71-80Doi.: 10.21839/lsdjmr.2024.v3.162

**Research Article**

# நற்றிணையில் உழவர்களின் அன்றாட வாழ்வியல்

த.மீனாகுமாரி

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை,

இம்மாகுலேட் மகளிர் கல்லூரி,

கடலூர்.

Email: jkmeena379@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

காலம் பல மாறினாலும் கண்டம் பல அழிந்தாலும் அழியாத சிறப்புடையது நம் தாய் மொழியாகும். அத்தகைய சிறப்புடைய மொழியில் இடம் பெற்றுள்ள எட்டுத் தொகை நூல்களுள் முதலாவதாக அமைந்துள்ளது. நற்றிணை ஆகும். இவை நல் என்னும் அடைமொழியை பெற்றுள்ளது. இந்நூல் வாயிலாக அக்கால மக்களிடம் பரவிக்கிடந்த பழக்க வழக்கங்களை அறிய உதவும் கண்ணாடியாகவும் உள்ளது என்றால் மிகையாகாது. இந்நூலில் அகவாழ்வு சார்ந்த செய்திகள் மட்டுமல்லாது அக்கால மக்களின் உழவு முறைகள் மற்றும் உழவர்களுடைய வாழ்வியலையும் சிறப்பான முறையில் எடுத்துரைக்கின்றது. இன்றைய உலகிற்கு தேவையானதும் மக்களின் உயர்நாடியாகவும் உள்ள உழவர்களையும் உழவுத் தொழிலையும் சிறப்பிக்கவும் இன்றைய உழவர்களுக்கு சங்க கால இலக்கியமான நற்றிணையில் காணலாகும் செய்திகள் முன்மாதிரியாக விளங்கின என்பது புலனாகின்றது.

குறிப்புச்சொற்கள்:உழவர்கள், வேளாளர், உழவுத்தொழில், வெறியாடல், கழைக்கூத்து, நெல், விதைகள், சுனை, விருந்தோம்பல். **கடலூர்**

## முன்னுரை

உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் அடிப்படை தேவைகளில் ஒன்று உணவு. இந்த உணவைத் தருவது உழவுத்தொழில்.

பண்டைய கால மக்கள் மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்தார்கள். நாகரீக மனிதர்களாய் மாறியதற்கு உழவே காரணமாய் அமைந்தது. காடுகளைத் திருத்தி கழனிகளாய் ஆக்கினார்கள். மலைகளின் அருவிகளில் வரும் நீரினை வாய்க்கால் அமைத்துக் குட்டைகளை வெட்டி அதில் நீரைத் தேக்கி பயிர்களுக்கு பாய்ச்சி உழவினை மேற்கொண்டார்கள்

தாங்கள் உண்ணும் உணவினை அவர்களே உழவு செய்து உண்ண வேண்டும் என்னும் எண்ணம் அவர்களுக்குள் தோன்றியது. இதனால் ஓரிடத்தில் தங்கி வாழ வேண்டும் என்ற நிலை உருவானது.

மக்கள் நாடோடிகளாகக் குகைகளில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் நிலையான ஓரிடத்தில் குடியேறினார்கள் இதற்கு உழவே இன்றியமையாததாய் அமைந்தது. குறிஞ்சி நிலத்தில் தோன்றிய நாகரீகம் முல்லை நிலத்தில் வளர்ச்சி அடைந்து மருதநிலத்தில் செழிப்பும் பெற்றது.

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து." (குறள் 1032)

உலகிலுள்ள பிற தொழில்களைச் செய்பவரையும் சேர்த்துத் தாங்கும் வல்லமை உழவுக்கு உண்டு என்பதால் உழவே உலகத்திற்கு அச்சாணியாய் விளங்குகிறது என்று தெய்வப் புலவர் கூறுகிறார். தொன்மை வாய்ந்த நூலானத் தொல்காப்பியத்தில் நான்கு வகை தொழில்கள் செய்வோர் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

அரசர்

அந்தணர்

வணிகர்

வேளாளர் என்பனவாகும்.

இவற்றில் வேளாளர் என்பவர் உழவுத் தொழிலைச் செய்யும் வேளாண்மையைக் குறிப்பதாய் அமைந்தது. உழவுத் தொழில் செய்வோர் ஈகைப் பண்பும் உடையோராய் உள்ளார்கள். எனவே வேளாளர் என்னும் சொல் வேளாண்மைச் செய்யும் உழவர்களுக்கே சிறப்புக்குரியதாய் ஆயிற்று.

'ஈகைக்கு பெயரான வேளாண்மை எனும் சொல் அவ்விகைக்கு கருவியான பயிர்த் தொழிலுக்கும் பெயர் ஆயிற்று பின்னர் அவ்விரண்டு தொழில்களையும் ஆளவரான வேளாளருக்கும் அதுவே பெயராயிற்று"

உழவுத்தொழில்

தொல்காப்பியரும் உழவு என்பது வேளாளர்களின் தொழிலாகக் குறிப்பிடுகின்றார்.

'வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது

இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" (தொல் பொருள்.ம.நூ.81)

வேளாண் தொழில் செய்யும் மக்களுக்கு உழுதல் மற்றும் உண்பித்தலும் தவிர பிற தொழில் இல்லை என்கிறார் தொல்காப்பியர்.

இங்கு உணவுப்பயிராகிய நெல் விளைவிப்பது வேளார்களுடைய தொழில் என்கிறார். எல்லாத் தொழிலும் சிறந்ததாய் எல்லா உயிர் வாழ்க்கைக்கும் இன்றியமையாததாய் உள்ள உழவுத்தொழிலைப் பண்தொட்டு நடத்தி வரும் வேளாளர் கொலையும் புலையும் நீக்கி நாகரீகத்திற்கு சிறந்தவராய் விளங்குதலின் பெருமை பழைய நல்லாசிரியர் இயற்றிய தமிழ் நூல்களில் பாராட்டப்பட்டு இருப்பதோடு இதுகாறும் மங்காது இருக்கின்றது.

இவர்கள் தங்களின் அறிவினைப் பயன்படுத்தி காலமறிந்து நிலத்தைத் திருத்தி வளம்படுத்தி நெல் முதலான நன்செய் பயிரும் துவரை முதலான புன்செய்ப் பயிரும் விளைவித்து, அவற்றால் வரும் பயன்களைத் தாமும் உண்டு பிறரும் உண்ணக் கொடுத்து யாடு, மாடு, மீன் முதலான மற்ற உயிர்களைக் கொல்லாமலுங் கொன்று அவற்றின் ஊனைத் திண்ணாமலும் அருலொழுக்கத்தில் இன்றும் தலைநின்று வருகிறார்கள்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வாமற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்." (குறள் 1033)

உழவுத் தொழிலைச் செய்து உணவினை உண்டு வாழ்பவரே உண்மையில் வாழ்பராவர். ஏனையோர் பிறரை வணங்கி உணவுண்டு அவர் பின் செல்பவர் என்று கூறுகிறார்.

'உழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூஉம்

விட்டேம் என் பார்க்கும் நிலை" (குறள். 1036)

உழவர்கள் உழவுத் தொழிலைச் செய்யவில்லையென்றால் உலகில் உள்ள பற்றுக்களை எல்லாம் விட்டோம் என்று கூறும் துறவிகளுக்கு வாழ்வு இல்லை என்று வள்ளுவர் உழவின் பெருமையை ஒரு அதிகாரம் அமைத்து மிகவும் அழகாய் கூறியுள்ளார்.

வேளாளர் குணநலன்கள்

திருவள்ளுவரின் கருத்தினைப் போலவே பண்டைய தமிழ் பாட்டாகிய பட்டினப்பாலையிலும் அதன் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த பழைய வேளாளரைப் பற்றிக் கூறுகின்ற விடுத்து

'கொலை கடிந்தும் களவு நீக்கியும்

அமரர்ப பேணியும் ஆவுதி யருத்தியும்

நல்லானோடு பகடு ஓம்பியும்

நான் மறையோர் புகழ் பரப்பியும்

பண்ணியம் அட்டியும் பசும்பதங் கொடுத்தும்

பண்ணியம் முட்டாத் தண்நிகழ் வாழ்க்கைக்

கொடுமேழி நசை உழவர்

நெடுநுகத்துப் பகல்போல

நடுவுகின்ற நன்னெஞ்சினோர்

வடு அஞ்சி வாய்மொழித்து

தகவும் பிறவும் ஒப்பநாடிக்

கொள்வதூஉம் மிகை கொளாது

கொடுப்பதூஉங் குறைகொடாது

பல்பண்டம் பகர்ந்துவீசுந்

தொல்கொண்டித் துவன்று இருக்கை" (வேளாளர் நாகரிகம் ப.25)

என்று கூறினார்.

கொலைக் களவு நீக்கிக் கடவுளரை வணங்கியும் வள்விகள் வேட்டும் எருது முதலியவைகளை பாதுகாத்தும், நான்மறை வல்ல அந்தணர்களின் புகழைப் பரப்பியும், விருந்தினர்க்கு பல பண்டங்களை கொடுத்துஞ் சோறு தந்தும், நல்வினையின்றும் பிறழாத அன்பு சுரக்கும் வாழ்க்கையினையுடைய கலப்பை தொழிலை விரும்பும் உழவராகிய வேளாளர் நடுவுநிலையில் நிற்கின்ற சிறந்த உள்ளத்தினராய் பழியை அஞ்சி உண்மையைப் பேசி தம்முடைய பண்டங்களையும் பிறருடைய பண்டங்களையும் ஒப்பாக பார்த்து தான் பிறர் பொருள்களை விலை கொள்ளுங்கால் விலைக்கு மேல் அப்பொருள்களை மிக அளந்து வாங்காமலும் பொருளை பிறருக்கு விலைப்படுத்துங்கால் அவர் கொடுக்கும் விலைக்கு அவற்றை குறைய அளந்து கொடாமலும் ஊதியத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்பவர் என்பது இப்பகுதியால் நன்கு விளக்குகின்றது. இதனால் உழவுத் தொழிலும் அவ்வுழவு தொழிலாளர் பெற்ற நெல், துவரை முதலான பல்பண்டங்களை நிலைப்படுத்தும் வாணிக வாழ்க்கையும் பண்தொட்டு வேளாளர் ஒருவருக்கே உரியவராய் வருதலுந்தெற்றென விளங்கா நிற்கும் என்று வேளாளர் நாகரிகம் என்னும் நூலில் மறைமலை அடிகள் கூறியுள்ளார்.

இத்தகைய சிறந்த வேளாளர் நாகரீகத்திற்குப் பிறப்பிடமாய் ஏனை நாகரிக வகுப்பினர் எல்லாரும் தோன்றுவதற்கு முந்தோன்றினவர்களாய் இருந்தார்கள்.

வேளாளர் அன்பிலும் அறத்திலும் சிறந்து நின்றாராதலின். எத்தகையோராயினும் எவ்வகுப்பினராயினும் துன்புறக் கண்டால் அத்துன்பத்தை நீக்கும் பொருட்டுத் தமக்குள்ள

பொருள்களையுஞ் சில நேரங்களில் தமது உயிரையும் கூடக் கொடுத்து உதவும் அத்துணை இறக்க நெஞ்சமும் கொண்டவர்களாக வேளாளர் திகழ்கின்றார்கள்.

குறிஞ்சி மருத திணையின் வளம்

குறிஞ்சித் திணையின் வளங்களை பின்வரும் பாடலின் மூலம் ஆசிரியர் கூறுகின்றார்.

'கன்று கால்யாந்த மன்றப் பலவின்

வேர்க் கொண்டு தூங்கும் கொடுஞ்சுளைப் பெரும்பழம்

குழவிச் சேதா மாந்தி அயலது

வேய்பையில் இறும்பின் ஆம்அறம் பருகும்

பெருங்கல் வேலிச் சிறுகுடி"
(நற்.பா.213, 2-6)

ஆவினுடைய இளைய கன்றானது தழைத்த மன்றம் போல் இருக்கும் பலா மரத்தில் காய்த்து தொங்கும் பெரிய பலாப்பழத்தை சிவந்த வாயினை உடைய ஆவின் கன்றானது நன்கு தின்னும் பின்பு பெரிய அருவிகளில் விழும் நீரினைக் குடிக்கும் இத்தகைய வளமிக்க நாடாகவும் உள்ளன என்றும் இதனை போன்றே மற்றொரு பாடல் மூலம் நீர்வளம் மிக்க ஊராக உள்ளதை அறியலாம்.

'சென்மோ வாழி தோழி பண்ணாள்

கருவி வானம் பொய்யா தாயினும்

அருவி யார்க்கும் அயந் திகழ் சிலம்பின்

வான்றோய் மாமலைக் கிழவினைச்" (நற்.பா 365, 5-8)

குறிஞ்சித் திணையின் சிறப்பினை பலப்பல நாட்கள் தொகுதியுடைய மேகங்கள் திரண்டு மழையினைத் தராமல் போயினாhலும் குறிஞ்சி மலையில் உள்ள அருவியில் நீரானது விழுந்த படியே இருக்கும் எவ்விதமான வறட்சியும் இம்மக்கள் அடைந்தது இல்லை. நீர்வளம் மிக்க ஊராக இங்கு உள்ளதை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

'தடமருப்பு எருமை மடநடைக் குழவி

தூண்டொறும் யாத்த காண்டகு நல்லிற்

கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை

சிறு தாழ் செறித்த மெல்விரல் சேப்ப

வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇப்" (நற்.பா.120, 1-5)

மருத நில மக்கள் தங்களின் வீடு தோறும் வளைந்த கொம்புகளை உடைய எருமைகளின் கன்றுகளை வீட்டில் உள்ள தூண்களில் கட்டி வைத்திருப்பார்கள். இம்மனைகளில் உள்ள பெண்டீர்கள் காதுகளில் குண்டலங்களையும் அணிந்து தன்னுடைய கைகளில் மோதிரம் அணிந்து கொண்டு அம்மோதிரம் அழுத்து விரல்கள் சிவக்கும் படியாக வாழை இலையினை அறுத்து உணவிடுவார்கள் என்றும் இந்நில மக்களின் செல்வ நிலையையும் வறுமையின்றி வாழ்ந்ததையும் அழகாக காணமுடிகிறது.

'புல்லேன் மகிழுந்த! புலத்தலும் இல்லேன்

கல்லா யானைக் கடுந் தேர்ச் செழியன்

பெருங்குளம் மடைநீர் விட்டெனக்

காலணைந் தெதிரிய கணைக் கோட்டு வாளை

அள்ளற் கழனி உள்வாய் ஓடி

பகடுசே றுதைத்த புள்ளி வெண் புறத்துச்

செஞ்சால் உழவர் கோற்புடை மதரிப்

பைங்காற் செறுவின் அளை முதற் பிறழும்

வாணன் சிறுகுடி"

(நற்.பா.340, 1-9)

செழியனின் படையினை போல பரப்பினாலே மாற்றி பெற்ற பெருங்குளம் ஒன்று மருத நிலத்தில் இருந்தது. அதன் நீர் பெருக்கத்தினால் அதன் மடையைத் திறந்து விட்டனர். அதனாலே கால்வாயை அடைந்து எதிரிட்டு வருவதாயிற்று அந்த நீரில் இருந்து திரண்ட கொம்புகளையுடைய வாளை மீன் ஒன்று வயலில் உள்ள சேற்றில் புரண்டும் சேற்றை வாளால் அடித்ததாலும் அதனால் தெறித்த சேற்று துளிகள் வயலில் உழும் உழவனின் மேல் வெண்புள்ளியை போல் படிந்தது. வால்மீனை உழவன் உழும் மாட்டினை அடிக்க வைத்திருக்கும் கைக்கோளினை அடித்தபோதும் அவைகள் அடங்கிய பாடில்லை.

இத்தகைய செல்வமிக்க ஊராக இந்நிலங்கள் விளங்கியவற்றை ஆசிரியர்கள் குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகின்றது.

'வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்

அரியலம் கழனி ஆர்க்காடு அன்ன" (நற்.பா-190,5-6)

நன்கு நீர்வளம் மிக்க நெய்தலில் மலர்கள் நெற்பயிர்களிடத்தே மலர்ந்திருக்கும் அம்மலர்களிடத்தே உண்டான தேன் அக்கழனி முழுவதும் பரவி கிடைக்கும் வளமான நாடு என்பதை ஆசிரியர் கூறுகின்றார்.

முருகன் வழிபாடு

கானவன் எய்த அம்பு குறி தவறி போனதைப் பற்றிக் கூறும் போது தெய்வத்தின் குற்றத்தினால் இவ்வாறு நடந்ததாக எண்ணினான் அதனால் தன்னுடைய சுற்றத்தாரோடு மலைநாட்டின் தெய்வமான முருக கடவுளை வழிபட்டார்கள். இந்நாட்டில் மழை பெய்த்ததாதான் இந்த தெய்வத்தின் மனம் குளிர்ந்து தங்களுடைய அம்புகள் குறித்தறாக சரியான இலக்கை அடையும் என்பதை பின்வரும் பாடலின் மூலம் அறியலாம்.

'பணைத்த பகழ்ப் போக்கு நினைந்து கானவன்

அணங்கொடு நின்றது மலைவான் கொள்கெனக்

கடவுள் ஓங்கு வரை பேண்மார் வேட்டெழுந்து" (நற்.பா.165,2-4)

வெறியாடல்

தலைவியின் மேனியில் மாறுதலைக் கண்ட அன்னை தன்னுடைய மகளின் மேனியில் எண்ணற்ற மாற்றம் எதனால் ஏற்பட்டிருக்கும் கூடும் என்று அறிய வேண்டி வெண்மணலை பரப்பி கழங்கின் முன் நின்று வேலனையும் வரவைத்து அவனிடம் தன் மகளின் மாற்றத்திற்கு தெய்வக் குற்றமும் காரணமாக இருக்குமாய் என்றும் அவள் மேனியில் பசலை நோய் படர்ந்து அவளது வளையல் கழன்று விழுந்ததும் அன்னை அறியாதவளாய் ஏதோ தெய்வ குற்றம் ஏற்பட்டதால் இவ்வாறெல்லாம் நடைபெறுகின்றது என்று எண்ணி வெறியாடும் வேலன் வரவைத்து இக்குறி கேட்டால் இதனை வெறி பாடிய காமக்கண்ணியார் பின்வரும் வரிகளில் குறிப்பிடுகின்றனர்.

'பெய்ம்மணல் முற்றம் கடிகொண்டு

மெய்ம்மலி கழங்கின் வேலற் தந்தே" (நற்.பா.268, 8-9)

இதனைப்போலவே.

'வெம்மையின் தான்வருந் துறீஇ நம்வயின்

அறியா தயர்ந்த அன்னைக்கு வெறயென

வேலன் உரைக்கும் என்ப"

(நற்.பா.273,3-5)

என்பனவாக ஆசிரியர் கூறுகின்றார்.

கழைக் கூத்து

கழைக்கூத்து தற்போதும் தெருக்களில் பொது மக்கள் அரங்கில் சாகச நிகழ்வுகளாக செய்து காட்டும் கழை கூத்துக்கள் நடைபெற்று வருகின்றன. இம்முறைகள் சங்க இலக்கிய நூலான நற்றிணையிலும் கழைக்கூத்து என்ற பெயரிலேயே நடைபெற்றுள்ளது.

'கழை பாடு இரங்க பல் இயம் கறங்க

ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன் கயிற்று

ஆதவத் திம் கனி அன்ன செம்முகத்

துய்த் தலை மந்தி வன்பறழ் தூங்கா

கழைக்கண் இரும் பொறை ஏறி விசைத்து எழுந்து

குறக் குறுமாக்கள் தாளம் கொட்டும்" (நற்.பா.95,1-6)

இவற்றில் ஆசிரியர் கழைக்கூத்து எவ்வாறு நடைபெற்றது என்பது கூறுகின்றார் ஒரு பக்கம் மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழல் ஒலிக்கவும். பக்கவாத்தியங்களும் ஒலிக்க கூத்தாடுகின்றாள் ஆடுமகள். முறுக்கினையுடைய கயிற்றின் மேல் நடந்து செல்வாள். அக்கயிற்றின் மேல் மந்தியின் சிவந்த வாயினை உடைய மந்தியானது தூங்கிக் கொண்டு ஆடியிருக்கும். இவ்வாறாக அக்காலம் தொட்டு கழைக்கூத்ததானது நிகழ்ந்துள்ளதனை அறிய முடிகின்றது.

உணவு

உழவர்கள் பெரும்பாலும் மாமிச உணவு பழக்கத்தைக் கொண்டு உள்ளவர்களாக சங்க இலக்கிய நூல்கள் கூறுகின்றன. இவர்கள் ஆட்டிறைச்சி. மான்கறி போன்றவற்றை வரகு, சாமை போன்ற அரிசியினை பயன்படுத்தி சமைத்த சோற்றோடு தேன் மற்றும் நெய் கலந்து உண்ணும் முறையினை கொண்டுள்ளார்கள். உழவன் காட்டிலேயே அம்புகளை எய்தி கிடக்கும் பன்றி, ஆடு, மான் போன்ற இறைச்சியினை எடுத்து வந்து தான் மட்டும் உண்ணாது தன் சுற்றாதார் அனைவரும் உண்ணும் வண்ணம் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கும் பழக்கம் உள்ளவர்களாக இருந்தனர்.

நெல்லினால் குத்தி சமைத்த வெண்சோற்றோடு எலியின் சூட்டிறைச்சியையும் சேர்த்து நெய் முதலான பொருட்கள் சேர்த்து உண்ணும் பழக்கம் உண்டு என்பதை ஆசிரியர் கூறுகின்றார்.

'மையூன் பொரித்த நெய் வெண் புழுக்கல்

எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்" (நற்.பா.83,5-6)

எனவும்,

'கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை

தேங்கா கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு

காற்றளஞ் சிறுகுடிப் பகுக்கும்"

(நற்.பா.85, 8-10)

இந்த கருத்தினை ஒத்தார் போன்றே புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர் கூறுகின்றார்.

'தான்நெலி தீயின் விரைவனன, சுட்டு, நின்

இரும்போர் ஒக்கலோடு தினம் எனத் தருதலின்

அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி!! (புறம் பா.150,11-14)

எனவும்,

புறவுக் கரு அன்னை புன்பல வரகின்

பால்பெய் புன்கம் தேனொடு மயக்கி

குறுமுயல் கொழும்சூடு கிழித்த ஒக்கலொடு

இரத்தி நீடிய அகன்தலை மன்றத்துக்

கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்று

அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு

அகலாச் செல்வம் முழுவதும் செய்தான்

எம் கோன் வளவன் வாழ்க"

(புறம் பா.34.9-16)

என்கின்ற பாடல் அடிகளின் மூலம் உழவர்கள் புறாவின் கருவினை போன்ற விளைந்த வரகோடு முயலின் சூட்டிறைச்சியையும் தேனோடு கலந்து உண்டு வந்தார்கள் என்பதை இப்பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

'பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையோடு

குரூஉக்கண் இறடிப் பொடிமல் பெறுகுவிர்"

(பத்துப்பாட்டு மலைப்வரி, 168-169)

இப்பாடலில் நன்னக்குரிய சவ்வாது மலைகளின் அடிவாரத்தில் வாழ்ந்த மக்கள் தினைச்சோறும் நெய்யில் வெந்த இறைச்சியும் உண்டார்கள் என்பதை மலைபடுகடாம் ஆசிரியர் கூறுகின்றார்.

உடை

சங்க காலத்தில் அவரவர் தகுதிக்கு ஏற்ப உடை அணிந்தார்கள் ஆடவர் இடையில் ஒரு ஆடையும் மேலே ஒரு துண்டும் அணிந்தார்கள்.

நற்றிணையில் உழவர்கள் காடுகளில் உள்ள சந்தன மரத்தின் நாரினை உரித்து ஆடையாக கொண்டார்கள். பின்னர் மரங்களின் தழைகளை ஆடையாகவும் போட்டு கொண்டார்கள்.

'மரல் நார் உடுக்கை மலையுறை குறவர்" (நற்.பா.64, 4-5)

எனவும்,

'தழையணிந் தலமரும் அல்குல் தெருவின்" (நற்.பா.320,3)

இவைகள் மட்டுமல்லாது பருத்தியினால் செய்யப்பட்ட ஆடையினையும் உடுத்தி உள்ளனார்கள் இந்த ஆடையை இறவில் கஞ்சி இட்டு எடுத்து காயவைத்து உடுத்தும் பழக்கம் உழவர்களுக்கு உண்டு என்பதை,

'வறனில் புலைத்தி எல்லித் தோய்த்த

புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு" (நற்.பா.90, 3-4)

என்று மருதம் பாடிய அஞ்சில் அஞ்சியார் கூறுகின்றார். நாகரிகம் வளர வளர இன்று பல வகையான ஆடைகள் மாற்றம் கண்டுள்ளன இன்றளவில் மேலைநாட்டு ஆடைகளை அதிகம் விரும்பி அணியும் பழக்கம் நம் மக்களுக்கு உள்ளன. ஆனால் சங்க காலத்தில் உடலை மறைப்பதற்காக மானம் காக்கவும் ஆடையை அணிந்து கொண்டார்கள்.

வேட்டையாடுதல்

வேட்டையாடுதல் என்பது காணவனின் முக்கிய நிலையாக கருதப்படுகின்றன. வேட்டை என்பது

பெரும்பாலும் திணையினை அழிக்கவரும் விலங்குகளை கொள்வதாக அமைவதாகும்.

தான் வேட்டைக்கு செல்லும் போது கொம்புகளை ஊதியபடி கொள்ளுதலிலே சிறந்த வாயையுடைய நாயினை கூட்டி செல்வார்கள். பாம்புகள் இரைத்தேடித் திரிந்த படி இருக்கும் மக்கள் இருள் பரந்த நள்ளிரவாகிய இரவு காலத்திலேயே வலிய கணைகளையும் வன்மை பொருந்திய கைகளையும் உடைய கானவன் வில்லை எடுத்துக் கொண்டும் வேட்டையாட செல்வார்கள்.

இரவுப் பொழுதில் தன்னுடைய பிடியோடு வந்த காட்டு பன்றியை தன் வில்லிநாலே எய்தி கொள்வார்கள் அப்போது அவர்களுடன் வந்த நாயின் சத்தம் அவ்வூர் முழுவதும் கேட்டபடி இருக்கும்.

'கோடு துவையாய் கொள்வாய் நாயோடு

காடுதேர் அசைஇய வயமான் வெட்டு" (நற்.பா.276,1-2)

எனவும்

'வன்கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி

உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையோடு

மனவாய் ஞமலி ஒழுங்குப் குடை யாட

வேட்டுவலம் படுத்த உவகையன் காட்ட

(நடு - காற்) குரம்பைதன் குடிவயின் பெயரும்"

(நற்.பா.285,3-7)

இவ்வாறாக ஆசிரியர் கூறுகின்றார். இரவு நேரத்தில் திணையினை அழித்து தன்னுடைய இரையினை தேடி வரும் விலங்குகளை உழவர்கள் வேட்டையாடும் நிலை இருந்தது என்பதை இதன் மூலம் அறியலாம்.

முடிவுரை

வேளாளர் என்னும் பெயர் பின்னாளில் உழவரின் பெயராய் அமைந்தது. குறிஞ்சி மற்றும் மருதநில மக்களின் வளம் நாகரிகம் வளர அடித்தளமாய் அமைந்தது. உழவர்களின் உணவு முறைகள், வீட்டின் அமைப்பு, உடுத்தும் ஆடைகள் மற்றும் உழவர்களின் குணநலன்கள் போன்றவற்றை அறியமுடிகின்றது. உழவர்களின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதாய் அமைகின்றது. உழவர்கள் தங்களுக்கு கிடைக்கும் உணவினை தான் உண்பது மட்டுமல்லாது பிறருக்கும் கொடுப்பதை வழக்கமாக கொண்டார்கள். இவற்றின் மூலம் விருந்தோம்பல் என்பது அக்காலம் தொட்டே நம்முடைய பண்பாடாக கடைபிடிக்கப் படுகின்றது. உழவர்கள் நம் நாட்டின்; முதுகெலும்பாய் திகழ்கிறார்கள் என்பதை இதன் வழி பறைசாற்ற முடிகின்றது.

துணைநூற்பட்டியல்


1. இராசா.கி

தொல்காப்பியம்

பதிப்பு, ஜீன், 2015

பாவை பப்ளிகே ன்ஸ்,

இராயப்பேட்டை,

சென்னை - 600014.

2. குமரவேலன்.இரா

திருக்குறள்

பதிப்பு - 2008

பாரி நிலையம்;,

சென்னை - 108.

3. பாலசுப்பிரமணியன் கு.வே
நற்றிணை
பதிவு பிப்ரவரி 2007
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
அம்பத்தூர், சென்னை - 600098.

4. மறைமலை அடிகள்
வேளாளர் நாகரிகம்
பதிப்பு 20
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை - 600108.

5. மாணிக்கவாசன்.ஞா
புறநானூறு
பதிப்பு 2018
உமா பதிப்பகம்
சென்னை 600001.

6. மேகன்.இரா
பத்துப்பாட்டு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அம்பத்தூர்,
சென்னை - 600098.